## லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் – 2016

லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டடினதும் (''கம்பனி'') அதன் துணைக்கம்பனிகளினதும் (''தொகுதி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று மற்றும் ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயலாற்றல் தொடர்பான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பொதுத்துறையிலுள்ள பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றின் மூலம் நான் உதவியை பெற்றிருந்தேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை ("சபை") பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

-------------------------------------------

### 2.1 அபிப்பிராயம்

-------------------------------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகுதியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

#### 2.1.1 ஏனைய விடயம்

-------------------------------------

2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டடினது ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2016 மே 13 இல் அந்த நிதிக்கூற்றுக்களின் மீது மாற்றஞ்செய்யப்படாத அபிப்பிராயமொன்றை வழங்கிய பொதுத்துறையிலுள்ள மற்றுமொரு பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டன.

#### 2.1.2 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு இருக்கின்றன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பதும், மற்றும்

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 மற்றும் 153 ஆம் பிரிவுகளின் தேவைப்பாடுகளுடன் கம்பனி மற்றும் தொகுதியின் நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியன் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 1,523,935,000 வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 2,266,799,000 வரிக்கு முன்னரான தேறியலாபத்தை விளைவித்திருந்தமையால், மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 742,864,000 ஆன அதிகரிப்பொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. ஏனைய வருமானம் மற்றும் நிதி வருமானம் முறையே ரூபா 166,663,000 மற்றும் ரூபா 370,475,000 இனால் அதிகரித்தமை மேற்குறித்த முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 மனித வளங்கள் முகாமைத்துவம்

2016 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கம்பனியின் உள்ளபடியான மற்றும் சபை அங்கீகரித்த பதவியணியினர் முறையே 1,558 மற்றும் 1,649 ஆகக் காணப்பட்டது. ஆகையினால், 91 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. எவ்வாறாயினும், 2003 யூன் 02 இன் பிஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒட்டுமொத்த ஆளணியினரை மேவுகைசெய்யக்கூடிய வகையில் முறையாக அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தினை கம்பனி கொண்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை மின்சாரசபை (சீஈபீ) மற்றும் மற்றும் லங்கா எலக்ரிசிற்றி கம்பனி (பிறைவேட்) லிமிட்டட் கம்பனிக்கிடையே எவ்வித முறையான மின்சக்தி கொள்வனவு உடன்படிக்கையும் காணப்படவில்லை.

(ஆ) 2002 இலிருந்து கணக்கீட்டு மற்றும் செயற்பாட்டு நடைமுறை கையேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) "Street light Customers" தொடர்பில் ரூபா 286 மில்லியன் தொகையான வியாபார பெறவேண்டியவைகள் குறிப்பிடத்தக்க காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக நிலுவையாகக் காணப்பட்டிருந்ததுடன் குறித்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது நிதிக்கூற்றுக்களில் முழுமையாக காலக்கழிவிடப்பட்டிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (எஸ்டிஜீ) தொடர்பான ஐக்கிய நாடுகளின் ''2030 நிகழ்ச்சிநிரலின்' பிரகாரம், அனைத்து அரச நிறுவகங்களும் அதன் பரப்பெல்லையின் கீழ் காணப்படும் இலக்குகள் மற்றும் தொழிற்பாடுகளினை அமுல்படுத்தலில் பங்களிப்புச்செய்தல் வேண்டும். ஆனால், கம்பனி எஸ்டிஜீ இனை அறிந்திருக்காததுடன் அடைந்துகொள்ளவேண்டிய இலக்குகள், அந்த இலக்குகளினை அடைந்துகொள்வதிலுள்ள இடைவெளிகள் மற்றும் செயல்முன்னேற்றங்களினை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள்கூட இனங்காணப்பட்டிருக்கவில்லை.